# கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

# நாடெங்கும் அமைந்துள்ள தேசிய பாடசாலைகளில் வெற்றிடமாகவுள்ள இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் I அதிபர் பதவிக்கான வெற்றிடங்களை பூர்த்தி செய்தல் -2025

இத்துடன் உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட தேசிய பாடசாலைகளில் அதிபர் பதவிகளுக்கான வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்காக தகுதி பெற்ற அலுவலர்களை தெரிவு செய்வதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்வி சேவை குழுவின் கட்டளையின் பிரகாரம் தரம் I இலங்கை கல்வி நிர்வாக சேவையில் தகுதி பெற்ற அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. தகைமைகள்

i. இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் I அலுவலராக இருத்தல்

குறிப்பு 1 : விண்ணப்பிக்க வேண்டிய இறுதி தினத்துக்கு முன்னர் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் I இற்கு உயர்வு பெறுவதற்கு தகுதி பெற்ற அலுவலர்கள் இந்த வெற்றிடங்களுக்காக விண்ணப்பிக்க விண்ணப்பிக்க முடியும் என்பதோடு, உரிய உயர்வை பெறுவதற்கான தகுதிகளை பூர்த்தி செய்யாத அலுவலர்களினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். (எவ்வாறாயினும் நேர்முக பரீட்சை தருணத்தின் போது தரம் I க்கு உயர்வு பெற்ற கடிதம் கட்டாயமாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)

ii. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அல்லது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்வி சேவைக்குழுவினால், தேசிய பாடசாலை அதிபர்களாக நியமிக்க தகுதியற்றவர்களாக குறிப்பிடப்பட்ட அலுவலர்கள் விண்ணப்பிக்கக்கூடாது.

iii. விண்ணப்பதாரிகள் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளும் இறுதி தினத்தில் வயது 58 வருடங்களுக்கு அதிகமாக இருக்கக்கூடாது. ( தற்போது யாதேனும் பாடசாலையில் அதிபர் தரத்தில் வேலை பார்த்தல்/ கடமை நிறைவேற்றல்/ கடமை தழுவுதலுக்கு முறையாக நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கு அந்த அதிபர் பதவிக்கு விண்ணப்பிப்பதற்காக இந்த வயதெல்லை உரித்தானது அல்ல.)

02. நிபந்தனைகள்

i. இம்முறை வெற்றிடம் நிரப்பப்படும் போது உரிய அதிபர் பதவிக்காக நியமனம் பெறும் அலுவலர் அந்த பதவியில் குறைந்த பட்சம் 3 வருடங்கள் சேவையாற்ற வேண்டும்.

ii. அதிபர் பதவிக்கு நியமனத்தை பெற்றால் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான காரணம் இல்லாத பட்சத்தில் அப்பதவியில் கடமைப் பொறுப்பை ஏற்பதை **நிராகரிக்கக்கூடாது.**

03. **விண்ணப்பித்தை அனுப்ப வேண்டிய முறை**

i. விண்ணப்பதாரியால் இத்துடன் காட்டப்பட்டுள்ள மாதிரி படிவத்துக் அமைய A4 அளவிலான தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை சரியாக நிரப்பி பதிவுத் தபாலில் மாத்திரம் கீழ்க்காணும் முகவரிக்கு 2024.12.31 திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பத்தை உள்ளிட்டு அனுப்பும் கடிதவுறையின் இடது மேல் மூலையில் **"தேசிய பாடசாலைகள் அதிபர் பதவி - இ.க.நி சே – I"** எனக்குறிப்பிட்டு இருத்தல் வேண்டும். தாமதமாக அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு விண்ணப்பப் படிவங்கள் **"உதவி செயலாளர், கல்வி சேவைகள் தாபனக் கிளை, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல"** எனும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

ii. அண்மையில் எடுத்துக்கொண்ட தமது 2 x 2 ½ அங்குல வர்ண புகைப்படத்தை விண்ணப்பத்தின் வலது மேல் மூலையில் ஒட்டி அனுப்ப வேண்டும்.

iii மேலும், புள்ளி வழங்கும் திட்டத்தின் 2.1, 2.2 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலை முகாமைத்துவத்தில் சேவை அனுபவத்தை நிரூபிக்க நியமனம் / இடமாறுதல் கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டால், அந்த கடிதங்களுடன் விண்ணப்பதாரர் பாடசாலை வகைப்பாட்டுக்கு (1AB,1C,2,3) அமைய அந்த வகையை சேர்ந்த பாடசாலையில் உரிய காலப்பகுதியில் சேவையாற்றியுள்ளார் என்பதையும் உரிய நியமனம் / இடமாற்றம் செய்யப்பட்ட கடிதம் கையொப்பம் இடப்பட்டிருக்க வேண்டியது அரசாங்க சேவை ஆணைக்குழுவின்/மாகாண சபைகளின் கௌரவ ஆளுநர்களால் அதிகாரமளிக்கப்பட்டமைக்கமைய உரிய நியமன அதிகாரமுள்ள மேலதிக செயலாளர் (கல்வி சேவைகள்) / மாகாண கல்விப் பணிப்பாளரால் எழுத்துபூர்வ உறுதிப்படுத்தல் கடிதம், விண்ணப்பத்துடன் அல்லது நேர்முக பரீட்சையின் போது கட்டாயம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும் புள்ளித் திட்டத்தில் 2.3 இன் கீழ் பாடசாலை மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொண்ட அலுவலராக பாடசாலை மேற்பார்வை சேவை அனுபவத்தை உறுதிப்படுத்த உரிய நியமன கடிதம் / இடமாற்ற கடிதத்ததை முன்வைப்பதாயின் உரிய அலுவலர் பாடசாலை மேற்பார்வை நடவடிக்கைகளில் ஈடுபட்டதை உரிய மாகாண அதிகாரியினால் ∴ கல்வி அமைச்சின் உரிய பிரிவுக்கு பொறுப்பான மேலதிக செயலாளரினால் எழுத்துபூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

iv. புள்ளி வழங்கும் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கமைய சமர்ப்பிக்கப்படும் அனைத்து தகுதிகளும் விண்ணப்பத்தின் இறுதித் திகதி அல்லது அதற்கு முன் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதோடு அந்த திகதிக்குப் பிறகு பூர்த்தி செய்யப்பட்ட தகுதிகள் அல்லது சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கப்படாது. மேலும் நேர்முக பரீட்சை திகதிக்குப் பிறகு சமர்ப்பிக்கப்படும் கடிதம் அல்லது சேவைச் சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படாது.

04. முறைமை

i. பாடசாலையை அடிப்படையாகக் கொண்டு அதிபர்களாக அலுவலர்கள் தெரிவு செய்யப்படுவதோடு , வெற்றிடங்கள் உள்ள பாடசாலைகள் எண்ணிக்கைக்கு சமமான அலுவலர் தொகையினர் அதிபர்களாக நியமிக்கப்பட தெரிவு செய்யப்படுவார்கள்.

குறிப்பு 2: நேர்முக பரீட்சையில் காட்டப்படும் தகுதியின் அடிப்படையில் எந்தப் பாடசாலைக்கும் தகுதி பெறாத அலுவலர்கள், வெற்றிட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள அதிபர் தேர்ந்தெடுக்கப்படாத மற்ற பாடசாலைகளுக்கு நியமனம் செய்யப்பட கருத்திற் கொள்ளப்படுவார்கள்..

ii. அதன் படி, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்வி சேவைக் குழுவினால் அனுமதிக்கப்பட்ட இத்துடன் காட்டப்பட்ட புள்ளித்திட்டத்துக்கு அமைய, அக்குழுவினால் நியமிக்கப்பட்ட நேர்முக பரீட்சை சபையினால் வழங்கப்படும் புள்ளி, விண்ணப்பதாரரின் விருப்பின் தேர்வு, சேவை அவசியம் விண்ணப்பதாரர் தொடர்பில் காணப்பட்ட/ நிலுவையிலுள்ள ஒழுக்காற்று நடவடிக்கை, பாடசாலை கலாசார பின்னணி /சம்பிரதாயங்கள், போதனா மொழி, பாடசாலை பிரிவு (ஆண்/ பெண்/ கலவன்) என கவனத்தில் கொள்ள வேண்டிய வேறு விடயங்களும் கருத்திற் கொள்ளப்பட்டு கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி செயலாளரால் வழங்கப்படும் பரிந்துரை அடிப்படையில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்வி சேவை குழுவினால் அதிபர் பதவிக்கு நியமிக்கப்படுவர்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்வி சேவைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்

நாலக்க கலுவெவ
செயலாளர்
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

2024.12. 12